பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

25 11 2024 **MONDAY** 7 15 **PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக தமது அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மக்களவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.
- மகாராஷ்ட்ராவில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.
- தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்காக 14 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- இந்தியாவின் குகேஷ் - சீனாவின் Ding Liren இடையேயான உலக செஸ் சாம்பியன் போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<<>>>>

கூட்டுறவுத்துறையின் வளர்ச்சிக்காக தமது அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சர்வதேச கூட்டுறவு மாநாட்டினை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கூட்டுறவுத்துறையின் வளர்ச்சியில் தனி கவனம் செலுத்தியதாக அவர் கூறினார்.

கூட்டுறவுத்துறைக்கென தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கூட்டுறவு வங்கிகளின் கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது கூட்டுறவு வங்கிகளில் 12 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கூட்டுறவு வங்கிகள் தற்போது ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

“கூட்டுறவு மூலம் வளர்ச்சி” என்பதை தாரக மந்திரமாக கொண்டு தமது அரசு செயல்பட்டு வருவதாகவும் பிரதமர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில், அடுத்த ஆண்டு கூட்டுறவு ஆண்டாக கடைபிடிக்கப்படவுள்ளதையொட்டி, அதனை நினைவுகூறும் வகையில் அஞ்சல் தலையையும் திரு நரேந்திர மோடி வெளியிட்டார்.

<<<<<<<>>>>

மக்களவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் உறுப்பினர்கள் செயல்பட வேண்டும் என்று மக்களவைத் தலைவர் திரு ஓம். பிர்லா கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

நாட்டின் 75-ஆவது அரசியல் சாசன தினம் நாளை கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய அவர், இதுதொடர்பான ஆக்கப்பூர்வமான விவாதங்களில் உறுப்பினர்கள் பங்கேற்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

உறுப்பினர்கள் தங்களது எதிர்ப்புகளை கண்ணியமாக தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அவை நடவடிக்கைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் அமளியில் ஈடுபடக்கூடாது என்றும் திரு ஓம். பிர்லா வேண்டுகோள் விடுத்தார்.

<<<<<<<>>>>

அரசியல் சாசன தின கொண்டாட்டங்கள் நாளை தொடங்கி, ஓராண்டிற்கு நடைபெறும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அரசியல் சாசனம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் 75-ஆவது ஆண்டு தினத்தையொட்டி ஓராண்டிற்கு இதுதொடர்பான கொண்டாட்டங்களை நடத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாடு முழுவதும் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதிவரை இதுதொடர்பான நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் சாசன தினத்தையொட்டி நாடாளுமன்றத்தின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாளை உரையாற்றுகிறார்.

<<<<<<<>>>>

மத்திய கிழக்கு பகுதியில் நடைபெற்றுவரும் வன்முறை சம்பவங்கள் கவலை அளிப்பதாக உள்ளது என்று வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக இத்தாலி சென்றுள்ள அவர், அங்கு நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

பாலஸ்தீனத்திற்கும் - இஸ்ரேலுக்கும் இடையே சண்டை நிறுத்தத்தை ஏற்படுத்த உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இஸ்ரேல் மற்றும் ஈரானுடன் இந்தியா தொடர்ந்து, தொடர்பில் உள்ளதாகவும், பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும் என்று வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

எந்தவொரு பிரச்சினைக்கும் போர் தீர்வாகாது என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முன்னதாக, எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சி தலைவர்கள் பங்கேற்ற கூட்டமும் நடைபெற்றது.

<<<<<<<>>>>

மகாராஷ்ட்ரா சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றிபெற்றுள்ளதையடுத்து, அங்கு புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

முதலமைச்சர் பதவி தொடர்பாக கூட்டணி கட்சிகளுக்கு இடையே எவ்வித பிரச்சினையும் இல்லை என்று தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரான திரு பிரஃபுல் பட்டேல் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக, பிஜேபி, சிவசேனா மற்றும் தேசியவாத காங்கிரஸ் ஒருங்கிணைந்து விவாதித்து உரிய முடிவினை மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை கட்சித்தலைவராக திரு அஜித்பவார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இதேபோல், சிவசேனா கட்சியின் சட்டப்பேரவை கட்சித்தலைவராக திரு ஏக்நாத் ஷிண்டே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

<<<<<<<>>>>

ஒடிஷாவில் பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி தலைமையில் புவனேஷ்வரில் இன்று நடைபெற்றது.

ஒடிஷா சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறை குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அம்மாநில அமைச்சர் திரு Mukesh Mahaling பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் நாளை தொடங்கவுள்ளதை சுட்டிக்காட்டிய அவர், இதில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க தயாராக உள்ளதாக கூறினார்.

<<<<<<<>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்காக கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற சிறப்பு முகாம்கள் மூலம் ஏழு லட்சத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாக தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிறப்பு முகாம்களில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களும், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற முகாம்களில் நான்கு லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்களும் பெறப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

இம்மாதத்தில் நடைபெற்ற சிறப்பு முகாம்கள் மூலம் 14 லட்சத்திற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>

ஜம்மு காஷ்மீரில் மேற்கொள்ளப்பட்டுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

Tawi ஆற்றுப்பகுதியில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்த அவர், இதனை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

திட்டப்பணிகளின் தரத்தையும் அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு மனோஜ் சின்ஹா கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 24 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 70 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவின் குகேஷ் - சீனாவின் Ding Liren இடையேயான உலக செஸ் சாம்பியன் போட்டி சிங்கப்பூரில் இன்று தொடங்கியது.

--------------

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா 295 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பெர்தில் நடைபெற்ற இப்போட்டியின் நான்காம் நாளான இன்று 534 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடும், 3 விக்கெட் இழப்பிற்கு 12 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடனும் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய ஆஸ்திரேலியா, 238 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Travis Head 89 ரன் எடுத்தார்.

பும்ரா மற்றும் முகமது சிராஜ் அபாரமாக பந்துவீசி தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

இந்தியா முதல் இன்னிங்சில் 150 ரன்னுக்கும்,

ஆஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 104 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 6 விக்கெட் இழப்பிற்கு, 487 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக்கொள்வதாக அறிவித்தது.

இப்போட்டியில் 8 விக்கெட்டுகளை வீழ்த்திய பும்ரா ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரின் இரண்டாவது போட்டி அடுத்த மாதம் 6-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம், உலக டெஸ்ட் சாம்பியன் போட்டிக்கான புள்ளிகள் பட்டியலில் இந்தியா மீண்டும் முதலிடத்தை பிடித்தது.

---------------

ஸ்வீடனில் நடைபெற்றுவரும் உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் Sarthak Arya – Syndrela Das இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

---------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்கள் ஏலம் இரண்டாவது நாளாக இன்றும் சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் நடைபெற்றுவருகிறது.

<<<<<<<END>>>>